தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 1452/F/2023 (SA 3990/F/2022)**

திரு.கு.பாலதண்டபாணி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636007. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் 26.09.2023 அன்று SA 3990/F/2022 வழக்கில் விசாரணை செய்யப்பட்டு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**"மனுதாரரின் 03.12.2021 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழான மனுவில் கோரியுள்ள நபரான திரு.K.பழனிமுத்து என்பவரின் மீது 5000 லிட்டர் டீசல் முறைகேட்டிற்காகவும், தனியாரிடமிருந்து டீசல் கொள்முதல் செய்து, கிளையில் கழக பேருந்துகளுக்கு நிரப்பியதற்கான குற்றச்சாட்டு குறிப்பாணை எண்.249-2222-டி-2ஏ, தஅபோக-2016 நாள் 25.04.2017 அன்று அன்னாரின்மீது விசாரணை மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவர அறிக்கையை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவலாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்து, மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுவிட்டது என்ற விவரத்தை உடனடியாக இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக அலுவலக மேலாண்மை இயக்குநர் / பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக்கொள்கிறது".**

2. மேற்சொன்ன ஆணை நிறைவேற்றப்படவில்லையென்று தெரிவித்து மனுதாரர் 30.10.2023 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆணை நிறைவேற்றாமை மனு ஆணையத்தால் பெறப்பட்டு NC 1452/F/2023 ஆக பதிவு

செய்யப்பட்டது. மனுதாரரின் ஆணை நிறைவேற்றாமை மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3. இன்றைய (08.07.2026) நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.S.செல்வகுமார், உதவி மேலாளர் (சட்டம்- கூட்டாண்மை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. இன்றைய விசாரணையின் போது ஆணையத்தின் மேற்சொன்ன 26.09.2023 தேதியிட்ட ஆணை நிறைவேற்றப்படாதது குறித்து, பொதுத்தகவல் அலுவலரிடம் விசாரணை செய்த போது பொதுத்தகவல் அலுவலர் ஆணையத்தின ஆணை நகல் 18.10.2023 அன்று பெறப்பட்டு, 16.11.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது.

**“மனுதாரரின் வழக்கு எண்.SA 3990/F/2022ல் 26.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.M.மகேந்திரன், உதவி மேலாளர் (தணிக்கை & கூட்டாண்மை) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், சேலம் அவர்களுக்கு சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 19.08.2026 அன்று அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 1452/F/2023 (SA 3990/F/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636007.

**திரு.M.மகேந்திரன்,**
**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636007.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மனுதாரர்**
திரு.கு.பாலதண்டபாணி,
180 / 215, காந்திபுரம்,
தாராபுரம்-638656,
திருப்பூர் மாவட்டம்.

Copy to file: KR/PA